


ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






ஜூலை மாதம் 14ம் தேதி எல்விஎம்-3 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்ட சந்திரயான்-3

# சரித்திரம்

## நிலவில் கால்பதித்தது இந்தியா வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது விக்ரம் லேண்டர்: உலகநாடுகள் வியப்பு




புதுடெல்லி, ஆக. 24–

நிலவை ஆய்வு செய்ய இஸ்ரோ அனுப்பிய சந்திரயான்–3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர், வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது. இதன் மூலம் அமெரிக்கா, ரஷ்யாவைத் தொடர்ந்து நிலவில் கால்பதித்துள்ள இந்தியா, தனது விண்வெளி பயணத்தில் புதிய மைல் கல்லை எட்டியுள்ளது. சந்திரயான் நிலவினை அடைந்ததைத் தொடர்ந்து இந்தியாவின் வெற்றியை தெரிவித்த இஸ்ரோ தலைவர் "இந்தியா நிலவில் உள்ளது" என்று அறிவித்தார்.

நிலவினை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் சந்திரயான்–3 விண்கலம் கடந்த மாதம் 14ம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்–3 ராக்கெட் மூலம் மதியம் 2.35 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. அப்போது பேசிய இஸ்ரோ தலைவர் சோமநாத், "திட்டமிட்டபடி விண்கலம் பூமியில் இருந்து 179 கிலோ மீட்டர் தொலைவில் அதன் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. சந்திரயான் – 3 நிலவை நோக்கிய தனது பயணத்தைத் தொடங்கிவிட்டது. சந்திரயான்–3 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டதன் மூலம் மீண்டும் அது மிகவும் வலுவான ஒரு விண்கலம் என்பதை உலகுக்கு நிரூபித்துள்ளது" என்று தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஆக.1–ம் தேதி புவியீர்ப்பு விசையில் இருந்து விலக்கப்பட்டு நிலவை நோக்கிசெல்லும்வகையில் சந்திராயன் 3 ன் பயணப் பாதை மாற்றப்பட்டது. தொடர்ந்து 5 நாள் பயணத்துக்கு பின் கடந்த 5–ம் தேதி நிலவின் சுற்றுவட்டப்பாதைக்குள் சந்திரயான்–3 நுழைந்தது. ஆக.17ம் தேதி பிற்பகல் 1.15 மணிக்கு சந்திரயான்–3 விண்கலத்தில் லேண்டர் பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நிலவுக்கு 153 x 163 கி.மீ. தொலைவில் ரோவர் பயணித்து வந்தது. அதில் இருந்து லேண்டரின் உயரம் படிப்படியாக குறைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் புதன்கிழமை இந்திய நேரப்படி மாலை சுமார் 6 மணி அளவில் சந்திராயன் – 3 ஐ நிலவில் தரையிரக்க திட்டமிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து நேற்றுபுதன்கிழமைகாலை முதல் லேண்டரைத் தரையிரக்குவதற்கான வேலையில் இஸ்ரோ விஞ்ஞானிகள் ஈடுபட்டுவந்தனர். இதனைத் தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு லேண்டரை தரையிரக்கும் பணியினைவிஞ்ஞானிகள் தொடங்கினர்.லேண்டரின் உயரம் படிப்படியாக குறைக்கப்பட்டுலேண்டர் நிலவினை நோக்கி பயணித்தது. இதனைத் தொடர்ந்து நிலவின் தென்துருவத்தில் விக்ரம் லேண்டர் மாலை 6.02 மணிக்கு வெற்றிகரமாக தரையிரக்கப்பட்டது. அப்போது, இஸ்ரோ விஞ்ஞானிகள் உள்ளிட்டோர்கைகளைத் திட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த சாதனை குறித்த அறிவிப்பை, இஸ்ரோ தலைவர் சோம்நாத் அறிவித்தார். இந்தியா தற்போது நிலவின் மீது இருப்பதாக அவர் பெருமிதம் பொங்க குறிப்பிட்டார். அமெரிக்கா, ரஷ்யாவைத் தொடர்ந்து இந்தியா நிலவில் கால் பதித்துள்ளது.

### மனித குலத்திற்கும் சொந்தமானது பிரதமர் பெருமிதம்

நிலவில் சந்திரயான் 3 தரையிறங்கியதைடுத்து, இந்திய விஞ்ஞானிகளின் கடும் உழைப்பை பாராட்டி இந்திய பிரதமர் மோடி, "வரலாற்று சிறப்புமிக்க மகத்தான தருணம் இது. இந்தியர்களின் வாழ்த்து ஓங்கி ஒலிக்கும் நேரம். இது 140 கோடி இந்தியர்களின் இதயங்களின் மனவலிமைக்கான தருணம். இந்த வெற்றி ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் சொந்தமானது," என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

## சிறுபான்மையினர் உரிமைகளை காக்க தி.மு.க. தொடர்ந்து செயலாற்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை , ஆக. 24–

சென்னை கோயம்பேட்டில் மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற கருணாநிதியின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ–மாணவிகளுக்கான பேச்சுபோட்டிபரிசளிப்பு விழாவில் மாநில அளவில் வெற்றி பெற்ற 6 மாணவ–மாணவிகளுக்கு பரிசுத் தொகைக்கான காசோலைகள்,பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கி பாராட்டினார்.



அப்போது அவர் பேசியதாவது:–எப்போதும் என்னை சுறுசுறுப்பாக வைத்திருக்கக் கூடிய, ஊக்கம் தரக்கூடிய வகையில் என்னை இயக்கிக் கொண்டிருக்கக் கூடியவர்கள் யார் என்று கேட்டால்,மாணவர்களும், இளைஞர்களும்தான். எனவே, அப்படிப்பட்ட மாணவ மாணவியர்கள் நிரம்பியிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில், உங்களிடையேஇருப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். திராவிட இயக்கம் என்பதே பேசிப்பேசி வளர்ந்த இயக்கம்.திராவிட இயக்கம் என்பதே எழுதி எழுதி வளர்ந்திருக்கக்கூடிய இயக்கம் என்பது எல்லோருக்கும் தெரியும். நமது தி.மு.க. அரசு எப்போது ஆட்சிப் பொறுப்பேற்கிறதோ, அப்போதெல்லாம் சிறுபான்மையினர் நலனுக்காக போராடக்கூடிய, வாதாடக்கூடிய, சாதனைகளை தீட்டக்கூடிய பல்வேறு பணிகளை நிறைவேற்றி தந்திருக்கிறது என்பதெல்லாம் ஒரு மிகப்பெரிய வரலாறு.

இப்படி சிறுபான்மையினர் நலன் காக்கும் ஏராளமான திட்டங்களை நம்முடைய அரசின் மூலமாக நாம் தொடர்ந்து செய்து வருகிறோம். சிறுபான்மையினர் உரிமைகளைக் காக்க மக்கள் மன்றத்திலும் தி.மு.க. தொடர்ந்து செயலாற்றிடும் என்ற உறுதியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார். இதில் அமைச்சர்கள்பொன்முடி, மா.சுப்பிரமணியன், செஞ்சி மஸ்தான், மேயர் பிரியா, ஏ.எம். வி.பிரபாகரராஜா, சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ்மற்றும்பலர் கலந்து கொண்டனர்.



# இன்று

24-8-2023

முளைக்கீரை ஒரு வாரம் சாப்பிட்டால் நரை நீங்கும்
சக வருடம் 1945 பாத்ரபதம் 02

| சோபகிருது ஆவணி 7 | AUG - THU வியாழன் | ச:ஃபர் 6 வளர்பிறை 236 / 129 | இராசிபலன் |
|---|---|---|---|

வளர். அஷ்டமி 40.44 (மா. 10.23) அனுஷம் 58.33 (கா. 05.30) தியாஜ் 08.52 அகஸ் 30.45 சித்த. மதுரை சொக்கநாதர் பாணனுக்கு அங்கம் வெட்டிய லீலை. விருதுநகர் சுவாமி குதிரை வாகனத்திலும் அம்பாள் சிம்ம வாகனத்திலும் புறப்பாடு. திருப்பதி ஏழுமலையப்பன் புஷ்பாங்கி சேவை.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 11.30-12.00 | 12.15-1.15 | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை | ——— | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூலம் : தெற்கு; பரிகாரம் : தைலம்; சிம்ம லக்னம் இருப்பு நா. 4 வி. 14; சந்திராஷ்டமம் பரணி; கரணம் : 3-4.30; சூரிய உதயம் : 6.04

கெடுவான் கேடு நினைப்பான்

இராசிபலன்: மேஷம் - நலம்; ரிஷபம் - பாராட்டு; மிதுனம் - ஆசை; கடகம் - பரிசு; சிம்மம் - செலவு; கன்னி - மேன்மை; துலாம் - ஆர்வம்; விருச்சி - உதவி; தனுசு - முயற்சி; மகரம் - உறுதி; கும்பம் - பக்தி; மீனம் - தடங்கல்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

தட்டிப் பறிப்பவன் வாழ்ந்ததில்லை..!
விட்டுக் கொடுப்பவன் வீழ்ந்ததில்லை..!

புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை– 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,450 | Rs. 5,920 |


# கவர்னர் இன்று கோவை வருகை கருப்புக்கொடி காட்டப்போவதாக அறிவிப்பையடுத்து பலத்த பாதுகாப்பு



கோவை , ஆக. 24-

தமிழக கவர்னர் ஆர். என். ரவி 2 நாள் பயணமாக இன்று (24-ந்தேதி) கோவை வருகிறார். காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு அவர் கோவை வந்தடைகிறார். பின்னர் அங்கிருந்து கோவை பாரதியார் பல்கலைக்கழக விருந்தினர் மாளிகைக்கு செல்கிறார். தொடர்ந்து அவர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் 38-வது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்று மாணவ-மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி உரையாற்றுகிறார்.

அங்கு சிறப்பு விருது பெறுபவர்களுடன் அவர் கலந்துரையாடுகிறார். இதையடுத்து பிற்பகலில் அவர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் இருந்து கார் மூலம் பழனி தண்டாயுதபாணி கோவிலுக்கு செல்கிறார். அங்கு தரிசனம் முடிந்து மீண்டும் அவர் பாரதியார் பல்கலைக்கழகம் வருகிறார். இரவு விருந்தினர் மாளிகையில் ஓய்வெடுக்கிறார். 25-ந்தேதி பேரூரில் பேரூர் ஆதீனம் நடத்தும் நொய்யல் பெருவிழா நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். அதன்பின் அவர் கோவை புறப்பட்டுச் செல்கிறார்.

இதற்கிடையே இன்று கோவை வரும் கவர்னர் ஆர். என். ரவிக்கு கருப்புக் கொடி காட்டப்போவதாக தந்தை பெரியார் திராவிடர் கழகம் அறிவித்துள்ளது. நீட் தேர்வு எதிர்ப்பு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல் கவர்னர் இழுத்தடித்து வருவதை கண்டித்து இந்த போராட்டத்தில் ஈடுபடப்போவதாக பொதுச்செயலாளர் கு.ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். இந்த போராட்ட அறிவிப்பு காரணமாக கோவை வரும் கவர்னருக்கு வழக்கத்தை விட கூடுதல் போலீஸ் பாதுகாப்பு அளிக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. கோவை விமான நிலையம், பாரதியார் பல்கலைக்கழகம் உள்பட அவர் வந்து செல்லும் அனைத்து இடங்களிலும் போலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

# காவிரி மேலாண்மை வாரியத்திற்கு அனைத்து அணைகளையும் இயக்கும் அதிகாரம் வழங்க வேண்டும்– ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை , ஆக. 24-

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:- தமிழ்நாட்டின் காவிரி பாசன மாவட்டங்களில் கருகும் நிலையில் உள்ள குறுவை பயிர்களைக் காக்க காவிரியில் வினாடிக்கு 24,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடும்படி தமிழகம் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், அறமும், மனசாட்சியும் இல்லாத கர்நாடக அரசு தமிழகத்திற்கு தண்ணீர் திறப்பதை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.

அணைகளில் தேவைக்கும் அதிகமாகவே தண்ணீர் வைத்துள்ள கர்நாடகம், தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வழங்க மறுப்பது கடுமையாக கண்டிக்கத்தக்கது. காவிரி மேலாண்மை வாரியத்துக்கு மாற்றமாக நடுவர் மன்றத்தால் கூறப்பட்டுள்ள பக்ரா பியாஸ் மேலாண்மை வாரியம் அனைத்து அதிகாரங்களையும் கொண்டதாக உள்ளது. இந்த வாரியம் தான் பக்ரா, நங்கல், பியாஸ் திட்டங்களின் அணைகளை இயக்கி பஞ்சாப், அரியானா, ராஜஸ்தான், இமாச்சலபிரதேசம், சண்டிகர், டெல்லி ஆகிய 7 மாநிலங்களுக்கு நீரையும், மின்சாரத்தையும் வழங்கி வருகிறது.

55 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் இந்த அமைப்பு எந்த சிக்கலும் இல்லாமல் நீரையும், மின்சாரத்தையும் பகிர்ந்தளித்து வருகிறது. காவிரி நடுவர் மன்றம் 1991-ம் ஆண்டில் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பும், 2005-ம் ஆண்டில் வழங்கிய இறுதித் தீர்ப்பும் கர்நாடக அரசால் ஓர் ஆண்டு கூட சரியாக செயல்படுத்தப்படவில்லை.

அதனால் இப்போதைய அமைப்பு மாற்றப்பட வேண்டும். பக்ரா பியாஸ் மேலாண்மை வாரியத்திற்கு வழங்கப்பட்டிருப்பது போன்று, காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அனைத்து அணைகளையும் இயக்கும் அதிகாரத்தை காவிரி மேலாண்மை ஆணையத்திற்கு மத்திய அரசு வழங்க வேண்டும். இதுகுறித்து மத்திய அரசுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்து வெற்றி பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437

# தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னை தீவுத்திடலில் 15 நாட்கள் பட்டாசு விற்பனை

## கடைகள் அமைப்பதற்கான டெண்டர் அறிவிப்பு




சென்னை, ஆக.24.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னை தீவுத்திடலில் பட்டாசு விற்பனை செய்ய தமிழக அரசு டெண்டர் கோரியுள்ளது. நாடு முழுவதும் தீபாவளி பண்டிகை வரும் நவம்பர் 12ம் தேதி கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி சென்னை தீவுத்திடலில் ஆண்டுதோறும் பட்டாசு விற்பனை நடைபெறுவது வழக்கம். அந்த வகையில், இந்த ஆண்டு தீவுத்தடலில் பட்டாசு விற்பனைக்காக தமிழக அரசு டெண்டர் கோரியுள்ளது. அதன்படி, அக்டோபர் 29ம் தேதி முதல் நவம்பர் 12ம் தேதி வரையிலான 15 நாட்களுக்கு பட்டாசு விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 55 கடைகள் அமைப்பதற்கான டெண்டரை சுற்றுலா வளர்ச்சிக்கழகம் அறிவித்துள்ளது. விரைவில் டெண்டர் இறுதி செய்யப்பட்டு கடைகள் அமைக்கும் பணி தொடங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

## தமிழ்நாடு முழுவதும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில்

# ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா உத்தரவு





சென்னை, ஆக. 24-

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மக்களுக்கு உரிய மருத்துவ சேவை வழங்கப்படுகிறதா என ஆய்வு செய்ய சிவ்தாஸ் மீனா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கப்படுகிறதா என்பதை தொடர் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா உத்தரவிட்டுள்ளார் மேலும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளனரா என ஆய்வு செய்யவும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாடு, மருத்துவ சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து ஆய்வு செய்யவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் யார்? ரமேஷ் சென்னிதலா பெயர் அடிபடுகிறது



சென்னை , ஆக. 24-

தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளராக இருந்த தினேஷ் குண்டு ராவ் கர்நாடக தேர்தலில் போட்டியிட்டு வென்று மந்திரியாகி விட்டார். எனவே தமிழக காங்கிரசுக்கு புதிய பொறுப்பாளர் விரைவில் நியமிக்கப்பட இருக்கிறார். அகில இந்திய காங்கிரஸ் வெளியிட்டுள்ள பொறுப்பாளர்கள் பட்டியலில் தினேஷ் குண்டு ராவ் பெயர் இடம் பெறவில்லை. எனவே புதிய பொறுப்பாளர் நியமிக்கப்படுவது உறுதியாகிவிட்டது.

புதிய பொறுப்பாளராக ரமேஷ் சென்னிதலா அல்லது சல்மான்குர்ஷித் ஆகிய இருவரில் ஒருவர் நியமிக்கப்பட வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. ஏற்கனவே இருவரும் தமிழகத்தில் பொறுப்பாளர்களாக இருந்தவர்கள் தான். ரமேஷ் சென்னிதலா பொறுப்பாளராக இருந்தபோதுதான் தமிழ் மாநில காங்கிரசை காங்கிரசுடன் இணைத்தார். அதே போல் கட்சியில் பலர் இணைவதற்கும் காரணமாக இருந்தார். எனவே அவருக்கு வாய்ப்பு அதிகம் என்கிறார்கள்.



கள்ளிக்குடி வட்டம், பேய்க்குளம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# பிரதான் மந்திரி ராஸ்ட்ரிய பால் புரஸ்கார் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

## தென்காசி மாவட்ட ஆட்சியர் துரை.இரவிச்சந்திரன் தகவல்




தென்காசி, ஆக- 24.

தென்காசி மாவட்டத்தில் பிரதான் மந்திரி ராஸ்ட்ரிய பால் புரஸ்கார் விருதுக்கு விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் துரை.இரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

18 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளில், வீரதீர செயல்கள்,விளையாட்டு, சமூகசேவை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், கலை மற்றும் பண்பாடு மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் ஆகிய துறைகளில் சிறந்த சாதனை புரிந்த குழந்தைகளை தேசிய அளவில் கௌரவப்படுத்தும் விதமாக 2024ஆம் ஆண்டிற்கான பிரதான் மந்திரி ராஸ்ட்ரிய பால் புரஸ்கார் விருது இந்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் வழங்கப்படவுள்ளது.

இவ்விருது வீரதீர செயல்புரிந்த குழந்தைகளுக்கான விருது மற்றும் சிறந்த குழந்தைகளுக்கான விருது என இரண்டு பிரிவுகளாக வழங்கப்படவுள்ளது. எனவே தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் கீழ்கண்ட வழிமுறைகளைப்பின்பற்றி https://award.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக 31.08.2023க்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். மாநில அரசு, மாவட்ட ஆட்சியர், மாவட்ட நீதிபதிகள், உள்ளாட்சி அமைப்புகள், மாநில கல்வி நிலையங்கள் , மத்திய அரசு கல்வி நிலையங்கள், நவோதயா கல்வி நிலையங்கள், தேசிய மற்றும் மாநில குழந்தைகள் உரிமை ஆணையம், சமூகநீதி அமைச்சகம், இளைஞர் நலம் , விளையாட்டுத்துறை அமைச்சகம், பண்பாடு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், உள்துறை , தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் பரிந்துரை செய்யப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலும் தனிநபர்களும் உரிய ஆவணங்களுடன் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் இந்தியக்குடிமகனாக இருத்தல் வேண்டும், இந்தியாவில் வசிப்பவராக இருத்தல் வேண்டும், விருதுக்கு விண்ணப்பிக்க கடைசி நாளான 31.08.2023 அன்று 18 வயதிற்குள் இருத்தல் வேண்டும் மற்றும் 31.08.2023 அன்றைய நாளில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் விருதிற்கான சிறந்த செயல் மற்றும் சாதனை செய்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் துரை. இரவிச்சந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# சந்திரயான்–3 சாதனை திட்டத்தின் பின்னணியில் இருக்கும் விஞ்ஞானிகள்



சென்னை , ஆக. 24-

உலகநாடுகள் வியக்கும் வகையில் இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சிகள் அபரிமிதமான வளர்ச்சி அடைந்ததற்கு தமிழர்கள் மிக முக்கிய பங்கு வகித்துள்ளனர். பூமியில் இருந்து நிலவுக்கு சந்திரயான், செவ்வாய் கிரகத்திற்கு மங்கள்யான் போன்ற விண்கலத்தை செலுத்தி உலக நாடுகளை வியக்க வைத்து வருகிறது இஸ்ரோ. சந்திரயான் விண்கலத்தின் திட்ட இயக்குனர்களாக தொடர்ந்து தமிழர்கள் இருந்து வருகின்றனர். உலக அரங்கில் நம் நாட்டுக்கு மிகப்பெரிய அங்கீகாரத்தையும், தனி மரியாதையையும் ஏற்படுத்த இருக்கும் சந்திரயான் -3 திட்டத்தின் இயக்குனராக தமிழர் வீரா என்ற வீரமுத்துவேல் உள்ளார்.

சந்திரயான் - 3 திட்டத்தின் பின்னணியில் முக்கிய விஞ்ஞானிகள் உள்ளனர். அவர்கள் குறித்த விவரம் வருமாறு:-

**எஸ். சோம்நாத் (இஸ்ரோ தலைவர்)** சந்திரயான் - 3 விண்கலத்தின் நிலவு பயணத்திற்கு முதன்மையாக செயல்பட்டவர் விஞ்ஞானி எஸ். சோம்நாத். இவர் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். ஏற்கனவே இவர் விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் மற்றும் திரவ உந்து அமைப்பு மையத்தின் இயக்குனராக பணியாற்றினார். சந்திரயான்-3 மட்டுமின்றி ஆதித்யா-எல்1 முதல் சூரியன் மற்றும் ககன்யான் (இந்தியாவின் முதல் ஆளில்லாப் பயணம்) போன்ற திட்டங்களுக்கும் பொறுப்பாக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**பி. வீரமுத்துவேல் (சந்திரயான்-3 திட்ட இயக்குனர்)** சந்திரயான்-3 திட்டத்தின் முக்கிய பங்காற்றிய விஞ்ஞானி வீரா எனப்படும் பி.வீரமுத்துவேல். தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். ரெயில்வே ஊழியர் பழனிவேல் என்பவரின் மகனான இவர் சந்திரயான்-3 திட்ட இயக்குனர் ஆவார். முன்பு இவர் இஸ்ரோவின் விண்வெளி உள்கட்டமைப்பு திட்ட அலுவலகத்தின் துணை இயக்குனராக பணியாற்றினார். தாம்பரத்தில் உள்ள தனியார் கல்லூரியில் சேர்ந்து பொறியியல் படிப்பை முடித்து, பின்னர் உயர் படிப்பிற்காக சென்னை ஐ.ஐ.டி.யில் சேர்ந்து அங்கு ஏரோ ஸ்பேஸ் துறையில் முக்கிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளார்.

**எஸ்.உன்னிகிருஷ்ணன் நாயர் (விக்ரம் சாராபாய் விண்வெளி மைய இயக்குனர்)** கேரளாவின் திருவனந்தபுரத்தில் தும்பாவிற்கு அருகில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குனர் எஸ். உன்னிகிருஷ்ணன் நாயர். இவர் ஜியோசின்க்ரோனஸ் செயற்கைக்கோள் ஏவு வாகனம் (ஜி.எஸ்.எல்.வி.) மார்க்-III ஐ உருவாக்கியதில் பங்காற்றி உள்ளார். பின்னர் ஏவு வாகனம் மார்க்-III என மறுபெயரிடப்பட்டது. சந்திரயான் -3 விண்வெளி பயணத்துக்கு இவரும் முக்கிய பங்காற்றியுள்ளார்.

**எம். சங்கரன் (யு.ஆர். ராவ் செயற்கைக்கோள் மைய இயக்குநர்)** யு.ஆர். ராவ் செயற்கைக்கோள் மைய இயக்குநர் எம். சங்கரன் தற்போது தகவல் தொடர்பு, வழிசெலுத்தல், தொலைநிலை உணர்தல், வானிலை முன்னறிவிப்பு மற்றும் கிரக ஆய்வு ஆகியவற்றில் நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய செயற்கைக்கோள்களை உருவாக்கும் குழுவின் தலைவராக உள்ளார். இந்தியாவின் அனைத்து செயற்கைக்கோள்களும் இஸ்ரோவுக்காக இந்த மையத்தில் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்படுகின்றன.

**ஏ. ராஜராஜன் (வெளியீட்டு அங்கீகார வாரிய தலைவர்)** ஏ.ராஜராஜன் ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி ஆவார். அவர் ஸ்ரீஹரிகோட்டாவின் முக்கிய விண்வெளி துறைமுகமான சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் இயக்குநராக பணியாற்றுகிறார். அவர் லேப்இன் தலைவராகவும் உள்ளார். ககன்யான் மற்றும் எஸ்.எஸ்.எல்.வி உள்ளிட்ட இஸ்ரோவின் விரிவடையும் ஏவுகணை தேவைகளுக்கு திடமான மோட்டார்கள் மற்றும் ஏவுகணை உள்கட்டமைப்பு தயாராக இருப்பதை அவர் உறுதி செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களைத் தவிர, சந்திரயான்-3 குழுவில் இயக்குநர் மோகன் குமார் மற்றும் வாகன இயக்குநர் பிஜு சி தாமஸ் ஆகியோர் அடங்குவர். இவர்களுடன் சுமார் 54 பெண் பொறியாளர்கள், விஞ்ஞானிகள் நேரடியாக பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# கேரளாவில் இறந்ததாக கருதப்பட்ட முதியவர் உயிருடன் திரும்பி வந்தார் உறவினர்கள் அதிர்ச்சி



திருவனந்தபுரம் , ஆக. 24-

கேரள மாநிலம் எர்ணா குளம் மாவட்டம் ஆலுவா சுணங்கம்வெளி பகுதியை சேர்ந்தவர் அந்தோணி (68). மரம் வெட்டும் தொழிலாளியான இவர் பெரும்பாலும் குடும்பத்தினருடன் வீட்டில் இருப்பதில்லை. மாறாக சாலையோரத்தில் உள்ள பஸ் நிறுத்தம் உள்ளிட்ட இடங்களில் தங்கியிருந்திருக்கிறார். எப்போதாவது வீட்டுக்கு சென்று வந்தபடி இருந்துள்ளார். இந்நிலையில் கடந்த 14-ந்தேதி அங்கமாலி பகுதியில் சாலையோர நடைபாதையில் முதியவர் ஒருவர் பிணமாக கிடந்தார்.

அந்த முதியவரின் உடலை கைப்பற்றிய போலீசார், அவர் யார்? என்று விசாரணை நடத்தினர். ரோட்டோரத்தில் முதியவர் ஒருவர் பிணமாக கிடந்த சம்பவம் ஆந்தோணியின் குடும்பத்தினருக்கு தெரியவந்தது. இதையடுத்து எர்ணாகுளம் அரசு ஆஸ்பத்திரி பிணவறையில் வைக்கப்பட்டிருந்த அந்த முதியவரின் உடலை பார்த்தனர். மேலும் அந்த முதியவர் அந்தோணி என்று அடையாளம் காட்டினர். இதையடுத்து அந்த முதியவரின் உடலை அந்தோணியின் உறவினர்களிடம் ஒப்படைத்தனர். அவர்கள் அந்த உடலை பெற்றுக்கொண்டு இறுதிச்சடங்குகளை செய்தனர்.

பின்பு ஆலுவாலில் உள்ள செயின்ட் ஜோசப் கல்லறை தோட்டத்தில் முதியவரின் உடலை புதைத்தனர். முதயவரின் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் அந்தோணியின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் 7-ம் நாள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். அந்த நேரத்தில் அந்தோணி ஆலுவா சுணங்கம்வெளிக்கு வந்தார். இறந்ததாக கருதப்பட்ட அந்தோணி தங்களின் முன்பு உயிருடன் வந்ததை பார்த்து, அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அதிர்ச்சியடைந்தனர். அப்படியென்றால் அந்தோணி என்று நினைத்து புதைக்கப்பட்டது யார்? என்ற சந்தேகம் அவர்களுக்கு எழுந்தது. இறந்ததாக கருதப்பட்ட அந்தோணி உயிரோடு வந்திருப்பது குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து போலீசார் அங்கு வந்து விசாரணை நடத்தினர். அப்போது இறந்தது அந்தோணி இல்லை என்பதும், வேறு நபரின் உடலை அந்தோணி என்று நினைத்து வழங்கியதும் தெரியவந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த போலீசார், அந்தோணி என்று புதைக்கப்பட்ட முதியவர் யார்? என்று போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் கேரளாவில் பரபரப்பை ஏற்படுத்தியது.





▶ சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் முன்னாள் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் முகாம் மற்றும் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்ட புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி சென்னை ராஜாஜி சாலையில் உள்ள ஜார்ஜ் டவுன் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் ராயபுரம் சட்டமன்ற தொகுதி எம்எல்ஏ ஐட்ரீம்ஸ் ஆர். மூர்த்தி தலைமையில் வடசென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என் மருது கணேஷ் முன்னிலையில் மற்றும் திமுக கட்சியின் நிர்வாகிகள் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவில் ஏராளமான வழக்கறிஞர்கள் புதிய உறுப்பினராக திமுக கட்சியில் வழக்கறிஞர் பிரிவில் தங்களை இணைத்துக் கொண்டனர் .மேலும் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்ட புத்தகங்களை எம்.எல்.ஏ ஆர்.மூர்த்தி,என். மருதுகணேஷ் ஆகியோர் வழங்கினார்கள். விழாவில் ஜார்ஜ் டவுன் நீதி மன்ற வழக்கறிஞர்கள் வேந்தகுமார், உமா சங்கர் ,அசோக்குமார் , தங்கேஸ்வரன், பீட்டர் வெற்றிச்செல்வன், பெண் வழக்கறிஞர் ஜெயா மற்றும் ஏராளமான வழக்கறிஞர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாடு வழக்கறிஞர்கள் ஆர் பிரபாகரன் டி கவியரசு செய்தனர்.

# காரைக்காலில் மாணவர்களுக்கு போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்வு





காரைக்கால், ஆக,24

காரைக்கால் பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியின் நாட்டுநலப்பணிதிட்ட அலகுகள் சார்பாக போதை பொருள்களற்ற பிக்டியை உருவாக்கும் சீரிய நோக்கத்தோடு போதை இல்லா பாரத இயக்கம் விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை / புகார்ப்பெட்டி திறப்பு விழா கல்லூரி கருத்தரங்கு கூடத்தில் நேற்று காலை நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் முனைவர் ஆராமுதன் விழாவிற்குதலைமைதாங்கினார். மாவட்ட நாட்டுநலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தாமோதரன் கலந்துகொண்டு சிறப்பித்தார். இவ்விழாவிற்கு துறைசார் வல்லுநர் காவல் ஆய்வாளர் பிரவின்குமார் கலந்துகொண்டு மாணவர்களுக்கு போதை பொருள்களின் வகைகள் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் மாணவர்கள்போதைக்கு அடிமையாகாமல் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தினார். முன்னதாக கல்லூரியின் நாட்டுநலப்பணித்திட அலுவலர் எம் பிரவின்குமார் அனைவரையும் வரவேற்று இந்த முன் முயற்சியின் நோக்கம் மற்றும் செயல்திட்டம் குறித்து விளக்கினார்.

இதற்காகசிறப்புமின்னஞ்சல் முகவரி (drugfreepkiet@gmail.com) மற்றும் ஆலோசனை / புகார்ப்பெட்டி கல்லூரி வளாகத்தில்மூன்று இடங்களின் வைக்கப்பட்டுள்ளது. புகார்ப்பெட்டியில் பெறப்படும் புகார்களை பதிவு செய்து பாதிக்கப்பட்ட மாணவர்களை நல்வழிப்படுத்தும் விதமாக சிறப்பு ஆலோசகரை கொண்டு ஆலோசனை வழங்கவும், தேவை இருப்பின் மருத்துவ ஆலோசனையுடன் கூடிய மீட்பு நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இறுதியாக நாட்டுநலப்பணித்திட அலுவலர் கனக ஆறுமுகம் நன்றி கூறினார்.

இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நாட்டுநலப்பணிதிட்ட தன்னார்வலர்கள் சிறப்பாக செய்திருந்தனர். இந்நிகழ்வில் அனைத்து பேராசிரியர்கள், ஆய்வக வல்லுநர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தினர்..

# சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் 2 பயணிகளிடமிருந்து ரூ.37 லட்சம் ஹவாலா பணம் பறிமுதல் செய்யப்பட்டது

சென்னை, ஆக,24

பெங்களூருவில் இருந்து சென்னைசென்ட்ரல்வந்தபுள் டெக்கர் ரயிலில் சந்தேகத்திற்கு இடமான வகையில் ஒரு பயணி சென்றுள்ளார். அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த ரயில்வே பாதுகாப்பு படை போலீசார், அந்த பயணியின் உடமைகளை சோதனையிட்டபோது ரூ.25 லட்சம் ரொக்கம் இருந்துள்ளது.

அவரிடம் நடத்திய விசாரணையில் பெங்களூருவை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்பதும் சென்னை சவுகார்பேட்டையில் நகைக்கடையில் கொடுக்க பணம் கொண்டு வந்ததாகவும் தெரிவித்தார்.

உரிய ஆவணங்கள் இல்லாததால் அவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். இதேபோல் ஐதராபாத்தில் இருந்து சென்னை சென்ட்ரல் வந்த ரயிலில் பயணம் செய்த ஆந்தராவைச் சேர்ந்த வாசு என்பவரிடம் ரூ.11.98 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. தங்க நகை, பரிசு பொருட்கள் வியாபாரம் தொடர்பாக சென்னையில் உள்ள கடையில் பணம் கொடுக்க கொண்டு வந்ததாக வாசு தெரிவித்துள்ளார்.

போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் இவை ஹவாலா பணம் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே சம்பவம் குறித்து சென்னை வருமானவரித்துறை அதிகாரிகளுக்கு ரயில்வே பாதுகாப்புப்படை போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். 2 பேரும் கொண்டு வந்த பணத்துக்கு உரிய ஆவணங்கள் இருந்தால் வருமானவரித்துறையிடம் ஒப்படைக்க ஆர். பி.எப். போலீசார் முடிவு செய்துள்ளனர்.

# காரைக்கால் மாவட்டத்தில் அரசு பள்ளி மாணவர்கள், எளிமையாக, ஆங்கிலம் கற்க ஆங்கில வாசிப்பு திட்டம் தொடக்கம்





காரைக்கால் , ஆக. 24-

காரைக்கால் மாவட்டத்தில் அரசு பள்ளி மாணவர்கள், எளிமையாக, ஆங்கில வாசிப்பு கற்க காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு.குலோத்துங்கன் முயற்சியால் திஷா என்ற தன்னார்வ இயக்கம் மற்றும் இ.எல்.எப் இங்கிலிஷ் என்ற நிறுவனத்துடன் இணைந்து அரசு பள்ளி மாணவர்களுக்கு, ஆங்கிலம் வாசிப்பு திட்டம் கடந்த ஜுலை மாதம் தொடங்கப்பட்டது.

அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு, ஆங்கிலம் கற்றலின் மேலுள்ள பயத்தை நீக்கி, தன்னம்பிக்கை மற்றும் ஆர்வத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் காரைக்கால் மாவட்டத்தில், நான்காம் மற்றும் ஐந்தாம் வகுப்புகள் உள்ள 84 அரசு பள்ளிகளில் செயல்படுத்தப்படும். இதில் 2447 மாணவ மாணவிகள் பயன் பெறும் வகையில் அரசு பள்ளி ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கில பயிற்சி முகாம் 80 நாட்களுக்கு நடத்தப்பட்டது.

திஷா மற்றும் இ.எல்.எப் ஆங்கிலம் நிறுவனத்தின் மூலம் 4 மற்றும் 5 ஆம் வகுப்பு அந்தந்த பள்ளி ஆங்கில ஆசியர்களுக்கு ஆங்கில வீடியோ பாடங்கள்,கற்றல் பொருட்கள் கொண்டு பள்ளி மாணவர்களுக்கு எளிமையாக ஆங்கிலம் எப்படி கற்பிப்பது,பேசுவதும் ஆங்கிலம் கற்றல் எளிமையாக இருக்க பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அந்தந்த பள்ளிகளில் தாங்கள் கற்ற ஆங்கிலம் வாசிப்பு மற்றும் கற்பிக்கும் திறனை மாணவர்களிடையே கற்பித்து வருகின்றனர். இதனால் முன்பை விட சுலபமாக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆங்கில மொழியை எளிதாக கற்பிக்கின்றனர்.

இதே போல் அரசு பள்ளி மாணவர்களும் ஆங்கிலம் என்பது அறிந்து கொள்ள முடியாத பாடம் என்ற இருந்த நிலையில் 4 ஆம் வகுப்பு மாணவன் சர்வ சாதரணமாக சிபிஎஸ்இ பாட புத்தகத்தை அற்புதமாக படித்தும்,தன்னுடன் படிக்கும் மாணவ,மாணவிகளுக்கும் கற்பித்து வருவது மகிழ்ச்சியாக உள்ளது என ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர் மேலும் மாணவர்கள் ஸ்மார்ட் போர்ட் மற்றும் கல்வி கற்கும் உபகரணங்கள் கொண்டு ஆங்கில ரைம்ஸ் பாடிக் கொண்டும்,விலங்குகள் பொருட்கள் பெயர்களை இலக்கண ஆங்கிலத்தில் வாக்கியம் அமைத்து சக மாணவர்களுடன் உரையாடி கல்வி பயின்று வருகின்றனர்.



▶ புதுச்சேரி மாநில காங்கிரஸ் துணை தலைவர் எம்.ஒ.எச். யூ பஷீர் பிறந்தநாள் விழா முன்னால் மாநில தலைவர் ஏ.வி.சுப்ரமணி தலைமையில் கேக் வெட்டி கொண்டடப் பட்டது நிகழ்ச்சியில் காரைக்கால் மாவட்ட முன்னால் தலைவர் பாஸ்கர்.. வட்டாரத்தலைவர்கள் குளக்குடி மாறன். சுப்பையன்.. பிரகாஷ். அருள் டோமனிக்.. கருணாநிதி. ரோஜா நாநா மகளிர் அணி தலைவி நிர்மலா. தேவகி. மற்றும் அனைத்து அணி தலைவர்கள் நிறுவாகிகள். தொண்டர்கள் கலந்து கொண்டனர் மேலும் மாவட்ட பொது செயலாளர் (விவசாய அணி,)வரிச்சிக்குடி. பி.ஜி.சோமு தலைமையில் ஏலாக்காய் மாலை அணிவித்து கேக் வெட்டப்பட்டது நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாநில ஊடக பிரிவு துணை தலைவர் எம்.ஒ.எச்.யூ.பி.தஸ்லினா மாவட்ட பொது செயலாளர். பாலு ஆகியோர் ஏற்ப்பாடு செய்து இருந்தனர்

காட்டுச்சேரி ஊராட்சியில் 27 லட்சம் மதிப்பில்

# அரசு தொடக்கப் பள்ளி கட்டிடம் அடிக்கல் நாட்டுவிழா



தரங்கம்பாடி, ஆக- 24:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, காட்டுச்சேரி ஊராட்சியில் அரசு தொடக்கப்பள்ளி மயிலாடுதுறை எம்பி நிதியிலிருந்து ரூபாய் 27 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

தரங்கம்பாடி தாலுக்கா காட்டிச்சேரி ஊராட்சியில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையயான அரசு தொடக்கப்பள்ளி புதிய கட்டிடம் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் உள்ளூர் மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து ரூபாய் 27 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை நடைபெற்றது. இதில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டி பணியை துவக்கி வைத்தார்.

இப்பள்ளி பல ஆண்டுகளாக வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்த நிலையில் கிராம பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று பள்ளிக்கான புதிய கட்டிடம் கட்டுவதற்காக இடம் அரசாங்கத்தால் பெறப்பட்டு புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. பொதுமக்கள் பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் சட்டமன்ற உறுப்பினருக்கு நன்றி தெரிவித்தனர்.

இதில் செம்பனார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர், செம்பை திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.அப்துல்மாலிக், தரங்கை பேரூர் திமுக செயலாளர் முத்துராஜா, வட்டார கல்வி அலுவலர்கள் சீனிவாசன், சோமண்ணா, காட்டுச்சேரி ஊராட்சி மன்ற தலைவர் விஜயலட்சுமி சுவாமிநாதன், திருவிடைக்கழி ஊராட்சி மன்ற தலைவர் கே.பி. ராஜா, தலைமையாசிரியர் கனகலட்சுமி, பள்ளி ஆசிரியர்கள் காந்திமதி, பிரேமா மற்றும் பள்ளி மாணவ- மாணவிகள், பெற்றோர்கள், கிராம பொதுமக்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# சீர்காழி அருகே முதல்வரின் காலை உணவு திட்டம் வழங்கும் ஊழியர்களுக்கு அடி உதை, திமுகவினர் ரகளை



சீர்காழி, ஆக. 24-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே வெள்ளப்பள்ளம் கிராமத்தை சேர்ந்த பவளக்கொடி, புவியரசி உள்ளிட்ட மூன்று பேர் முதல்வரின் காலை உணவு திட்டத்திற்காக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் முதல்வரின் காலை உணவு திட்டத்திற்கு உணவு வழங்குவதற்காக இந்த மூன்று ஊழியர்களும் சமைத்து உணவு வழங்குவதற்காக தயார் நிலையில் இருந்துள்ளனர்.

அப்பொழுது அங்கு வந்த அதே பகுதியைச் சேர்ந்த திமுக கிளைக் கழக செயலாளர் மற்றும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் சேர்ந்து சமையல் ஊழியர்கள் மூவரையும் சரமரியாக தாக்கி பாத்திரங்களை தூக்கி வெளியே வீசி ரகலையில் ஈடுபட்டுள்ளனர்.

அடி தாங்க முடியாத பெண்கள் மூன்று பேரும் கீழே விழுந்துள்ளனர். அவர்களை அப்பகுதயினர் மீட்டு சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்துள்ளனர்.

முதல்வர் காலை உணவு திட்டத்தில் பணியமர்த்தப்படுவதில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக பெண் ஊழியர்கள் தாக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் இது குறித்து திருவெண்காடு காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பது பாதிக்கப்பட்ட பெண்களின் குற்றம் சாட்டுகின்றனர். உடனடியாக தமிழக முதல்வர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட பெண் ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 8.29 லட்சம் மதிப்பில் புதிய சமையல் கூடம் திறப்பு



மதுராந்தகம், ஆக,24

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே பெரும்பேர்கண்டிகை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 8.29 லட்சம் மதிப்பில் புதிய சமையல் கூடம் திறப்பு விழா நிகழ்ச்சி ஊராட்சி மன்ற தலைவர் சாவித்திரி சங்கர் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக ஒன்றிய பெருந்தலைவர் கண்ணன், மாவட்ட துணை செயலாளர் கோகுலகண்ணன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சாரதி, பொன்மலர்சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டு புதிய சமையல் கூடத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இதனைத் தொடர்ந்து காலை உணவு திட்டத்திற்கான தேவையான உபகரணங்களை வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெருவாயல் டி.ஜெ.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நான்கு துறைகளின் சங்கத் துவக்க விழா நடைபெற்றது



ஊத்துக்கோட்டை,ஆக24-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை, பெருவாயலில் டி.ஜெ.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் ஆங்கிலம், வணிகவியல், கணினி அறிவியல், கணக்குப்பதிவியல் மற்றும் நிதியியல் துறைகளின் சங்கத் துவக்க விழா நேற்று காலை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு,டி. ஜே.எஸ் கல்வி குழும தலைவர் டி.ஜே கோவிந்தராஜன் தலைமை தாங்கினார். டி.ஜெ. எஸ் கல்விக்குழுமத்தின் இயக்குனர் டாக்டர் பழனி முன்னிலை வகித்தார். டி.ஜெ. எஸ் கல்விக்குழுமத்தின் இயக்குனர் ஏ.கபிலன், டி.ஜே.எஸ் பொறியியல் கல்லூரியின் முதல்வர் ஜெ.பிரகாஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதில், சென்னை பல்கலைக்கழக ஆங்கிலத் துறைத்தலைவர் சுப்லா பாண்டியராஜன், சென்னை டி.ஜி. வைஷ்ணவா கல்லூரியின் கணக்குப்பதிவியல் மற்றும் நிதியியல் துறைத்தலைவர் டாக்டர் வி.சுபாஷினி, பொன்னேரி உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரியின் கணினி அறிவியல் துறைத்தலைவர் ஆர்.சுபத்ராதேவி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர்.

இதன்பின்னர், நான்கு துறைகளின்சங்கத்தை துவக்கி வைத்தனர். ஆங்கிலத்துறை சங்கத்தின் செயலாளராக முத்துக்குமரன், இணை செயலாளர் ஐசுபெசென்ட், பொருளாளராக லோகேஷ், வணிகவியல் துறை சங்கத்தின் செயலாளராக ஹேமசந்தர், இணை செயலாளர் கீர்த்திகா, பொருளாளராக பிரெஜிவல், கணினி அறிவியல்துறை சங்கத்தின் செயலாளராக சி.அஸ்வின், இணை செயலாளர் எஸ்.ஐஸ்வர்யா, பொருளாளராக ஏ.பிருந்தா, கணக்குப்பதிவியல் மற்றும் நிதியியல்துறை சங்கத்தின் செயலாளராக எஸ்.தருன், இணை செயலாளர் கிஷோர்,பொருளாளர் எட்வின் ஆகியோரை தேர்வு செய்து கௌரவித்தனர்.

இதன் பின்னர்,சிறப்பு விருந்தினர்கள் தங்களது துறைகள் குறித்து விளக்கி கூறி சிறப்புரையாற்றி பேசினர். முன்னதாக அனைவரையும் கல்லூரியின் முதல்வர் முனைவர் வி.லட்சுமிபதி வரவேற்றார். முடிவில்,மணிமேகலை நன்றி கூறினார்.

புதுச்சேரி எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் காரைக்கால் மருத்துவ கண்காணிப்பு குழு

# இணைந்து நடத்திய எய்ட்ஸ் விழிப்புணர்வுக்கான வினாடி வினா போட்டி



காரைக்கால் , ஆக. 24-

காரைக்கால் தந்தை பெரியார் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இதில் காரைக்காலில் உள்ள சுமார் 54 பள்ளிகளில் உள்ள 110 மாணவ மாணவியர்கள் வினாடி வினா போட்டியில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் காரைக்கால் மாவட்ட மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். சிவராஜ்குமார், காரைக்கால் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் விஜய மோகனா , துணை ஆணையர் (மேல்நிலைப்பள்ளி), காரைக்கால் மாவட்ட நாட்டு நல பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் எம். தாமோதரன் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு முதன்மை மருத்துவர், ஊழியர்கள் அனைத்து பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நாளை நடைபெற உள்ள விழாவில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் பரிசினை வழங்குவார். இந்த நிகழ்ச்சியானது காரைக்கால் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு குழுவுடன் காரைக்கால் மாவட்ட நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்கள் மாணவர்கள் செயல்பட்டனர். இந்த விழாவின் நன்றியுறையை காரைக்கால் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலர் சரவணன் தெரிவித்தார்.

# பெரியபாளையம் பவானி அம்மன் திருக்கோவிலில் போலி தரிசன டிக்கெட் விற்பனை செய்த மூவர் சிறையில் அடைப்பு



ஊத்துக்கோட்டை, ஆக24-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையத்தில் புகழ்பெற்ற அருள்மிகு பவானி அம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் 14 வாரங்கள் தொடர்ந்து ஆடித்திருவிழா நடைபெறுவதால் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பல்வேறு மாவட்டம், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களும் இக்கோவிலுக்கு வந்து தங்களது நேர்த்திக் கடனை செலுத்தி விட்டு செல்கின்றனர்.

இந்நிலையில், இக்கோவில் சார்பாக சிறப்பு தரிசன டிக்கெட்கள் ரூ.30 மற்றும் ரூ.100 கட்டணங்களில் விற்பனை செய்யப்படுகிறது. இந்நிலையில்,கூட்டத்தை பயன்படுத்தி ஞாயிற்றுக்கிழமைகளில் போலி சிறப்பு தரிசன டிக்கெட்டை சிலர் விற்பதாக கோவிலின் செயல் அலுவலர் பிரகாஷுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.எனவே,கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் அனைத்து சிறப்பு தரிசன டிக்கெடுகளை பரிசோதனை செய்தார்.அப்பொழுது ஒரு பக்தர் கொண்டு வந்த தரிசன டிக்கெட் போலியானது என தெரியவந்தது.எனவே,அந்த பக்தரிடம் இந்த டிக்கெட்டை விநியோகித்தது யார்? எனக் கேட்டபோது இக்கோவில் பிரகாரத்தில் உள்ள பரசுராமர் கோவில் அருகே விற்பனை செய்த நபரை அடையாளம் காட்டுவதாக கூறி அந்த பக்தர் அழைத்துச் சென்றார்.

செயல் அலுவலருடன் கோவில் பணியாளர் வெங்கடேசன் சென்று இருந்தார்.பக்தர் அடையாளம் காட்டிய நபர் இக்கோவிலில் முன்னாள் ஒப்பந்த பணியாளரான அரியப்பாக்கம் கிராமம், அருண்பாண்டியன்(35) என்பது தெரிய வந்தது. அவரிடம் ஏன்? இது போன்ற தவறான செயல்களை செய்கிறீர்கள்! என செயல் அலுவலர் பிரகாஷ் கேட்டார்.இதனால் ஆத்திரம் அடைந்த அருண்பாண்டியன் தரக்குறைவான வார்த்தைகளால் வெங்கடேசன் மற்றும் செயல் அலுவலர் பிரகாஷ் ஆகியோரை திட்டினார்.அதன் பின்னர் மிரட்டி,பணி செய்ய விடாமல் தடுத்தாராம்.இந்த சம்பவம் குறித்து செயல் அலுவலர் பிரகாஷ் பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார்.

எனவே, போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் தலைமையில் போலீசார் வழக்கு பதிவு செய்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்தனர்.மேலும்,இந்தச் சம்பவம் தொடர்பாக போலீசார் அருண்பாண்டியன், பெரியபாளையம் கலைஞர் நகரைச் சேர்ந்த வினோத்( 33),வடமதுரை கிராமம்,படவேட்டம்மன் கோவில் தெருவை சேர்ந்த தினகரன்(வயது47) ஆகிய மூன்று பேரை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர்.மேலும், குற்றவாளிகள் மூன்று பேர் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்து ஊத்துக்கோட்டை முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.பின்னர்,அவரது உத்தரவின் பேரில் மூவரையும் போலீசார் புழல் மத்திய சிறையில் அடைத்தனர். இச்சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### அறந்தாங்கியில் தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர்கள்

# மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரை கண்டித்து கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



அறந்தாங்கி,ஆக.24-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்கம் சார்பில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக அடிப்படை பணியாளர்களின் பதவி உயர்வினை வழங்க மறுக்கும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரை கண்டித்தும், கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்கு அரசால் பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யபட்டும் மாவட்ட நிர்வாகத்தில் பணி நியமன ஆணை வழங்க நீண்ட கால தாமதம் செய்வதை கண்டித்தும்

முக்கிய பணிகளுக்கு புதிய பணியிடத்திற்கான முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பி பணியிடங்கள் பெற்று பணியாளர்களை நியமிக்காமல் மாற்றுப் பணி என்ற பெயரில் பல மாதங்களாக பணியாளர்களை பணிபுரிய வைப்பதை கண்டித்தும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தினர், உடனடியாக கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் அடுத்த கட்ட போராட்டத்தில் ஈடுபட போவதாக தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் ஆர்ப்பாட்டத்தில் பேசினர்.

ஆர்ப்பாட்டத்திற்கு வட்டகிளைத் தலைவர் பிரவீன் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் கருப்பையா, துணை தலைவர் ஜபருல்லா ஆகியோர் துவக்கவுரையாற்றி முன்னிலை வகித்தனர், ஆர்ப்பாட்டத்தில் வருவாய்துறையில் அடிப்படை பணியாளர்களின் பதவி உயர்வினை தடுக்கும் கலெக்டரின் நேர்முக உதவியாளரின் ஊழியர் விரோத போக்கை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் கோசமிட்டனர், முடிவில் வட்டகிளை உறுப்பினர் பூங்குழலி நன்றி கூறினார்.

# நிலவில் சந்திரயான்-3 நேரலையில் பார்த்து மகிழ்ந்த இந்திய வீரர்கள்



அயர்லாந்த், ஆக.24-

சந்திரயான்-3 விண்கலத்தை கடந்த மாதம் (ஜுலை) 14ம் தேதி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்ய இந்தியா அனுப்பியது. இந்த 'லேண்டர்', நேற்று (புதன்கிழமை) மாலை 6.04 மணிக்கு நிலவின் தென்துருவத்தில் தரையிறங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

இதனை தரையிறக்குவதற்கான ஆயத்த பணிகளை இஸ்ரோ விஞ்ஞானிகள் நேற்று மாலை 05:44 மணிக்கு தொடங்கினர். அதன்படி லேண்டரை தரையிறக்கும் ஒவ்வொரு நொடியும் பரபரத்தது. இறுதியில் சரியாக நேற்று மாலை 06.04 மணிக்கு விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கியது. இந்த காட்சியை அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் நேரலைபார்த்துமகிழ்ந்தனர். இந்த புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# சட்ட பணிகள் ஆணைக் குழு மூலம் சட்ட விழிப்புணர்வு



புதுக்கோட்டை, ஆக.24-

புதுக்கோட்டை மாவட்ட சட்ட பணிகள் ஆணைக் குழு மூலம் புதுக்கோட்டை அரசு முன் மாதிரி மேல் நிலைப் பள்ளியில் சட்ட விழிப்புணர்வானது பள்ளி முதல்வர் பெ.சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் சட்ட ஆணைய சார்பு நீதிபதி செயலர் ராஜேந்திர கண்ணன் மற்றும் ஆணய வழக்கறிஞர் பெருமக்கள் மோட்டார் வாகன விதி முறைகள் மற்றும் விபத்து காப்பீடு, போதைப் பொருள் பயன்பாடு தடுப்பு, பாலியல் குற்றங்கள் மற்றும் அதற்கான தடுப்பு முறைகள் மற்றும் தண்டனைகள் குறித்தும் மாணவ மாணவிகளுக்கு விளக்கிக் கூறினர். விழா ஏற்பாட்டினை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் பத்மநாதன் செய்திருந்தார்.

# ரெகுநாதபுரம் அரசுபள்ளி மாணவிகள் கால்பந்து போட்டியில் முதலிடம்



ரெகுநாதபுரம்,ஆக.24-

புதுக்கோட்டை மாவட்ட பள்ளிக் கல்வித் துறையின் அறந்தாங்கி கல்வி மாவட்ட ஆலங்குடி குறுவட்ட பள்ளிகளுக்கு இடையான 14 வயதிற்குட்பட்டோர் மாணவிகளுக்கான கால்பந்து போட்டி ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது, இப்போட்டியில் ரெகுநாதபுரம் அரசு பெண்கள் பள்ளி மாணவிகள் கலந்து கொண்டு பல பள்ளி அணிகளை வென்று இறுதியாக வடகாடு தங்கும் மெட்ரிக் பள்ளி அணியுடன் விளையாடி வெற்றி பெற்று முதலிடத்தை பெற்றனர்.

வெற்றி பெற்ற மாணவிகளையும் மற்றும் பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் தங்கதுரை மாலா ஆகியோரையும் பள்ளிதலைமை ஆசிரியர் ராஜேந்திரன் மற்றும் ஆசிரியர் பெற்றோர்கள் ஆசிரியர் கழகம் மேலாண்மை குழு உறுப்பினர்கள் ஆகியோர் பாராட்டி வருகின்றனர்.

# கந்தர்வகோட்டை மற்றும் ஆதனக்கோட்டை சுற்றுவட்டார பகுதிகளில் நாளை பவர் கட்

கந்தர்வகோட்டை, ஆக.24-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஆதனக்கோட்டை புதுப்பட்டி பழைய கந்தர்வகோட்டை மங்களாகோவில் ஆகிய துணை மின் நிலையங்களில் மின் விநியோகம் இருக்காது என உதவி செயற்பொறியாளர் ராஜ்குமார் அறிவிப்பு விடுத்துள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது ஆதனக்கோட்டை புதுப்பட்டி பழைய கந்தர்வகோட்டை மற்றும் மங்களாகோவில் ஆகிய துணை மின் நிலையங்களில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் பழைய கந்தர்வகோட்டை, ஆதனக்கோட்டை, மின்னாத்தூர், கணபதிபுரம், பெருங்களூர், தொண்டைமான் ஊரணி, வாராப்பூர், அண்டக்குளம், மணவிடுதி, சோத்துப்பாளை, சொக்கநாதபட்டி, மாந்தான்குடி, காட்டுநாவல் மட்டையன்பட்டி, மங்களத்துப்பட்டி, கந்தர்வகோட்டை, அக்கச்சிபட்டி, வளவம்பட்டி மற்றும் கல்லாக்கோட்டை, சங்கம் விடுதி, மட்டங்கால் வேம்பன்பட்டி, சிவந்தான்பட்டி, வீரடிப்பட்டி, புதுப்பட்டி, நம்புரான்பட்டி, மோகனூர், பகட்டுவான்பட்டி, பல்லவராயன்பட்டி, பழைய கந்தர்வகோட்டை, அரவம்பட்டி, மங்கனூர், வடுகப்பட்டி, பிசானத்தூர், துருசுப்பட்டி, அக்கச்சிப்பட்டி, மங்களாகோவில், ஆத்தியாடிபட்டி, கல்லாக்கோட்டை, வெள்ளாளவிடுதி, சுந்தம்பட்டி ஆகிய பகுதிகளுக்கு காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின்விநியோகம் இருக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் இது நிர்வாக காரணங்கள் அடிப்படையில் கடைசி நேர மாறுதலுக்கு உட்பட்டது உதவி செயற்பொறியாளர் இயக்குதலும் காத்தலும் தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் கந்தர்வகோட்டை.

# காவிரியில் தண்ணீர் தமிழக முதல்வருக்கு த.மா.கா விவசாய அணி கோரிக்கை

புதுக்கோட்டை, ஆக.24-

காவிரியில் தண்ணீர் தொடர்ந்து வர நடவடிக்கை எடுக்க தமிழக முதல்வருக்கு த.மா.கா விவசாய அணி கோரிக்கைவிடுத்துள்ளது.

தமிழகத்தில் தற்போது குறுவை சாகுபடி நெற்பயிர் விவசாயம் செய்த விவசாயிகள் கதிர்வரும் சூழ்நிலையில் போதிய தண்ணீர் இன்றி அனைத்து பயிர்களும் கருகி உள்ளது. காவேரியில் நமக்கான உரிமை நீரை பெற்றுத் தர பலமுறை விவசாயிகள் போராடியும் கோரிக்கை வைத்தும், கர்நாடகா அரசிடமிருந்து உரிய நீரை பெற்றுத் தராததால் அனைத்து பயிர்களும் கருகி கொண்டுள்ளன.

குறிப்பாக நாகை மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் அளவில் நெற்பயிர் சாகுபடி செய்துள்ள நிலங்கள் ஏக்கருக்கு 1க்கு ரூ.25 ஆயிரம் வரை செலவு செய்து அனைத்து பயிர்களும் கருகி மாடு மேய்க்கும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். திருவாரூர் மாவட்டத்தில் 1லட்சம் ஏக்கர் விவசாயம் செய்த நெற்பயிர் அனைத்தும் கருகி காய்ந்துவிட்டது.

மொத்தத்தில்டெல்டா மாவட்டங்களுக்கு போதிய நீரை காவேரியில் பெற்றுக் கொடுக்காததால் அனைத்துவிவசாயிகளும் கடுமையான பாதிப்பிற்குள்ளாகி இருக்கின்றனர். மற்றும் கடந்த 3 மாதங்களாக மின்தடை காரணமாக ஆழ்துளை கிணறு மூலம் விவசாயம் செய்த நெற்பயிர்கள் கருகி கொண்டுள்ளன. 1 நாளைக்கு பலமுறை மின்தடை ஏற்படுவதால் குறிப்பாக மின்சாரம் வரும்போது 10 சென்ட் விவசாய நிலத்திற்கு நீர் பாய்ந்தால் உடனே மின்தடை ஏற்பட்டு மறுபடியும் மின்சாரம் வரும்போது அந்த 10 சென்ட் பாய்ந்த நிலத்தில் வெயிலின் காரணமாகவும் நீரை உருஞ்சி விடுவதால் மீண்டும் அந்த 10 சென்ட் பாய்ந்து அடுத்த பகுதிகளுக்கு நீர் பாய்ச்சுவது சிரமமாக உள்ளது.

மின்தடை இவ்வாறு தொடர்வதால் ஒரு ஆழ்துளை கிணறுக்கு சுமார் 3,4ஏக்கா;விவசாயம் செய்த விவசாயிகளின் நெற்பயிர்கள் கருகி கொண்டுள்ளது. கடலை சாகுபடி செய்தவர்களுக்கும் இதே நிலை தொடர்வதால் கடலை பயிர்களும் கருகிக்கொண்டுள்ளன.

எனவே, தமிழக அரசு மற்ற துறைகளில் கவனம் செலுத்துவது போல் தமிழகத்தில் பிரதான தொழிலான விவசாய தொழிலுக்கும் முன்னுரிமை வழங்கி தமிழக அரசு கூட்டணியில் உள்ள காங்கிரஸிடம் நமக்கான தண்ணீரை காலம் தாழ்த்தாமல் பெற்றுத்தர வேண்டும். அதே போல் மும்முனை மின்சாரத்தை வறட்சியான மாவட்டங்களுக்கு நாள் தோறும் தடையில்லாமல் 20 மணி நேரம் வழங்கினால் மட்டுமே இந்த வெயில் காலங்களில் விவசாயிகள் தாங்கள் பயிருக்கு போதிய நீரைப் பாய்ச்சி பயிர்களை காப்பாற்ற முடியும் என தமிழ் மாநில காங்கிரஸ் விவசாய அணி மாநிலத் தலைவர் துவார் சி.ரெங்கராஜன் கோரிக்கை வைத்துள்ளார்.

# விதிகளை மீறி கட்டிடங்கள் கட்டிய நடிகர்கள் பிரகாஷ்ராஜ், பாபி சிம்ஹாவுக்கு நோட்டீஸ் அனுப்பி விளக்கம் கேட்க முடிவு



**கொடைக்கானல், ஆக.24-**

கொடைக்கானலில் நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வில்பட்டி பகுதியில் விதிகளை மீறி வீடு கட்டி வரும் நடிகர் பிரகாஷ்ராஜ், பேத்துப்பாறை பகுதியில் வீடு கட்டி வரும் பாபி சிம்ஹா ஆகியோருக்கு எவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டது என விவசாயிகள் பரபரப்பு குற்றச்சாட்டுகளை எழுப்பினர்.

கொடைக்கானல் பகுதியில் கனரக வாகனங்கள் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் நடிகர்களுக்கு மட்டும் சிறப்பு அனுமதி வழங்கியது ஏன்? சுமார் 25 நாட்களுக்கு மேலாக ஜே.சி.பி. எந்திரம் பயன்படுத்த அனுமதி வழங்கியது யார்? என அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினர். இது குறித்து அப்பகுதியைச் சேர்ந்த ஊர் தலைவர் மகேந்திரன் கூறும் போது, பிரகாஷ்ராஜ் பங்களாவுக்கு வணிக பயன்பாட்டுக்கான மின்சார அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. லஞ்சம் கொடுத்து பஞ்சாயத்து அனுமதியின்றி சட்டத்துக்கு புறம்பான மின் அனுமதி பெற்றுள்ளனர். பங்களாவுக்கு செல்ல பட்டா நிலத்தில் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு உரிய அனுமதி பெறவில்லை. பாபிசிம்ஹா பங்களாவை ஒட்டி இருக்கும் 2 ஏக்கர் அரசு நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனவே இது போன்ற பிரச்சனையில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்களை திரட்டி போராட்டம் நடத்தப்படும் என்றார். இதுகுறித்து கொடைக்கானல் ஆர்.டி.ஓ. ராஜா தெரிவிக்கையில், குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அளித்த புகாரின் அடிப்படையில் பிரகாஷ்ராஜ், பாபிசிம்ஹா ஆகியோரது இடம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதா? என தாசில்தாரிடம் விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளேன். இந்த புகார்கள் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட்டு சம்மந்தப்பட்ட இடங்கள் அளவீடு செய்யப்படும். இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். மின் வாரிய பொறியாளர் முருகேசன் தெரிவிக்கையில், பிரகாஷ்ராஜ் பங்களாவுக்கு தற்காலிக மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

வில்பட்டி பஞ்சாயத்துக்கு கட்டும் வரி ரசீது இணைக்கப்பட்டுள்ளது. மின் வாரிய விதிகளின்படி தற்காலிக இணைப்புக்கு பஞ்சாயத்து வரி ரசீது இருந்தால்போதும். கட்டிட அனுமதி தேவையில்லை. கட்டுமான பணி முடிந்ததும் மீண்டும் மின்வாரியத்தை அணுகினால் நிரந்தர மின் இணைப்பு வழங்கப்படும். இதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்றார். இது குறித்து வில்பட்டி பஞ்சாயத்து தலைவர் பாக்கியலட்சுமி ராமச்சந்திரன் தெரிவிக்கையில், கடந்த 6 மாதங்களுக்கு முன்பு கட்டிடங்கள் கட்டக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அதனையும் மீறி கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. எனவே விதி மீறி கட்டிடங்கள் கட்டப்பட்டது குறித்தும், கனரக வாகனங்கள் பயன்படுத்தியது குறித்தும் அவர்கள் 2 பேருக்கும் நோட்டீஸ் அனுப்பி விளக்கம் கேட்கப்படும் என்று தெரிவித்தார்.

# செங்கோட்டையில் வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பு மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி,ஆக.24-


செங்கோட்டை நீதிமன்ற வளாகத்தில் வைத்து வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் மத்திய அரசு கொண்டுவந்துள்ள முப்பெரும் சட்ட பிரிவுகளை மாற்றம் செய்வதைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில் முப்பெரும் சட்டங்களான,

இந்திய தண்டனை சட்டம், இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம், இந்திய சாட்சிய சட்டம் ஆகிய முப்பெரும் சட்டங்களை,

தி பாரதிய நியா சன்ஹிடா, 2023 பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிடா, 2023, பாரதிய சாக்ஷிய பில், 2023 எனமொழி மாற்றம் செய்து சட்டப் பிரிவுகளை மாற்றி திருத்தம் செய்வதை மத்திய அரசு உடனடியாக கைவிடக் கோரியும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டுக்குழு கேட்டுக் கொண்டதற்கு இணங்க, ஒரு நாள் நீதிமன்ற பணிகளில் இருந்து முழுமையாக விலகி இருப்பது எனவும், செங்கோட்டை நீதிமன்ற வளாகம் முன்பாக, ஒன்றிய அரசுக்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டியும், செங்கோட்டை வழக்கறிஞர்கள் சங்கத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில்,

நீதிமன்ற பணிகளில் இருந்து விலகி நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் ஆ.வெங்கடேசன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் முத்துக்குமாரசாமி, செயலாளர் அருண், பொருளாளர்மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர், மூத்த வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி அனைவரையும் வரவேற்று பேசினார். அதனைத் தொடர்ந்து மத்திய அரசுக்கு எதிராகவும் மொழி மாற்றம் மற்றும் சட்டத்திருத்தங்களை கைவிடக் கோரியும் கண்டன கோஷங்கள் எழுப்பினர். இந் நிகழ்ச்சியில் மூத்த வழக்கறிஞர்கள் சங்கரலிங்கம், ஆதிபாலசுப்பிரம்ணியன், இளங்கோ மற்றும் வழக்கறிஞர்கள் சிதம்பரம், சத்தியசங்கர், நல்லையா, சுபசேகர், ஆசாத், வெங்கடேஷ், முகம்மதுசிராஜ், ராமலிங்கம், குமார், வீரபாண்டியன், வைரவன், ராஜா, சிவசுந்தர வேலன், முத்துராஜ், மாலதி, இசக்கிஇந்திரா, கலீலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# விஜய் மக்கள் இயக்கத்தின் அடுத்த கட்ட அரசியல் நகர்வு 26-ந்தேதி ஆலோசனை கூட்டம்



சென்னை, ஆக.24-

நடிகர் விஜய் மக்கள் இயக்க பணிகள் ஒவ்வொன்றும் பெரிய அரசியல் கட்சிகளுக்கு நிகராகும் வகையில் அமைந்து வருகிறது. மாணவ-மாணவிகளுக்கு ஊக்கப் பரிசு, பட்டினி தினத்தையொட்டி அன்னதானம், தலைவர்கள் சிலைக்கு மாலை மற்றும் ஏழை மாணவ-மாணவிகளின் கல்வி தரத்தை மேம்படுத்த தளபதி விஜய் பயிலகம் என்ற பெயரில் டியூசன் சென்டர், அடுத்ததாக அடித்தட்டு மக்களுக்காக இலவச சட்ட உதவி மையம் என பல்வேறு மக்கள் நல திட்டங்களை செய்து வருகிறார். மக்கள் நல பணிகளில் ஈடுபடும் இயக்க நிர்வாகிகளை சென்னையில் நேரில் அழைத்து பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்தினார்.

தொடர்ந்து விஜய் மக்கள் இயக்கத்தை மேலும் வலுப்படுத்த அரசியல் கட்சிகள் உள்ளது போல் அணிகளை உருவாக்கி அதற்கு நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டு இயக்கத்தினரை ஊக்கப்படுத்தி வருகிறார். அந்த வகையில் சில வாரங்களுக்கு முன்பு வழக்கறிஞர் அணியின் ஆலோசனை கூட்டம் பனையூரில் உள்ள தலைமை அலுவலகத்தில் 2 நாட்கள் நடந்தது. கூட்டத்தில் இயக்கத்திற்கும் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு ஏற்படும் சட்ட ரீதியான பிரச்சனைகளை எதிர்கொள்வது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

அடுத்ததாக வருகிற சனிக்கிழமை இயக்கத்தின் தகவல் தொழில்நுட்ப அணி அறிமுகப்படுத்தப்பட்டு அந்த அணியின் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது. இதுகுறித்து விஜய் மக்கள் இயக்க மாநில பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் கூறியதாவது:- விஜய் மக்கள் இயக்கத்தின் மூலம் மக்களுக்காக பல்வேறு திட்டங்களை விஜய் ஆலோசனையின்படி செய்து வருகிறோம். இதில் மக்கள் இயக்கத்தினர் தமிழகம் முழுவதும் உற்சாகமாக மக்கள் நல பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதைத்தொடர்ந்து இயக்கத்தின் வழக்கறிஞர் அணி கடந்த சில வாரங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கான ஆலோசனை கூட்டம் 2 நாட்கள் நடந்தது.

இதைத்தொடர்ந்து மக்கள் இயக்க செயல்பாடுகளை சமூக ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கும், இயக்கத்தினருக்கும் செயல்படுத்தும் நோக்கத்தில் தகவல் தொழில்நுட்ப பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இந்த பிரிவின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 26-ந்தேதி காலை 8.55 மணிக்கு பனையூரில் உள்ள அகில இந்திய தலைமை தளபதி மக்கள் இயக்க அலுவலகத்தில் நடைபெற உள்ளது. கூட்டத்தில் சுமார் 1200 பேர் கலந்து கொள்வார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# மதுரை பெருங்குடியில் உள்ள தனியார் பள்ளியில் 1120 மாணவர்களை கொண்ட 15 நிமிட உலக சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது




மதுரை,ஆக.24-

மதுரை பெருங்குடியில் உள்ள அமுதம் மெட்ரிகுலேஷன் பள்ளியில் மாணவர்களிடையே அன்புடன் அரவணைத்துக் கொள் என்ற கருத்துக்களைக் கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக 1120 மாணவர்களைக் கொண்ட சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது

அமுதம் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 1120 மாணவர்களை கொண்டு தொடர்ந்து 15 நிமிடங்கள் நடனம்ஆடி அன்புசின்னத்தை மாணவர்களால் உருவாக்கி சாதனை படைத்தனர் மாணவர்களிடையே சமத்துவம் சகோதரத்துவம் அரவணைப்பு ஆகியவற்றை குறிக்கும் வகையில் சுய அன்புடன் தன்னை அரவணைத்துக் கொள் என்ற கருத்தினை கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக 15 நிமிடம் பாடலுக்கு நடனம் ஆடி அன்பு சின்னத்தை உருவாக்கினார், மாணவர்களின் இந்த நிகழ்ச்சி பார்ப்பவர்களை கண்கவரும் விதமாக அமைந்தது நிகழ்ச்சிக்காக யுனிவர்சல் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் மற்றும் பியூச்சர் கலாம் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து மாணவர்களை கொண்டு அன்பு சின்னத்தை உருவாக்கினர், அவர்களின் சாதனையை பாராட்டி பள்ளி நிர்வாகிகளுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் பதக்கங்களை அணிவித்தனர், உலக வரலாற்றிலேயே பள்ளியில் பள்ளி மாணவர்களால் நடத்தப்படும் இந்நிகழ்ச்சி புதிய சாதனை முயற்சியாக அமைந்தது என பள்ளி முதல்வர் ஜெயரூபா விழாவிற்கு தலைமை தாங்கினார்.

பாரா ஒலிம்பிக் போட்டி மற்றும் சர்வதேச போட்டியில் தங்க பதக்கங்களை வென்ற அர்ஜுன விருது பெற்ற ஜெர்லின் அனிகா மற்றும் யுனிவர்சல் புக் ஆப் ரெக்கார்டு தலைவர் பாபு பாலகிருஷ்ணன் சாய்க்கியா அகாடமி இயக்குனர் செந்தில் லிங்கம். பள்ளி தாளாளர் பாண்டியன் மற்றும் மாணவர்கள் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டுள்ளார், இந்த சாதனை நிகழ்ச்சியை ஏற்படுத்தினார் உலக வரலாற்றில் பள்ளி மாணவர்களால் 15 நிமிடம் நடனம் ஆடி இந்த சாதனை நிகழ்ச்சி நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது என பள்ளி முதல்வர் ஜெயரூபா கூறினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# நிலவில் கால் பதித்தது இந்தியா : வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது விக்ரம் லேண்டர்

# விஜய் மக்கள் இயக்கத்தின் அடுத்த கட்ட அரசியல் நகர்வு நாளை மறுநாள் ஆலோசனை






# கொடைக்கானலில் விதிகளை மீறி கட்டிடங்கள் : நடிகர்களுக்கு நோட்டீஸ்

| | | | | |
|---|---|---|---|---|
| சென்னை / புதுக்கோட்டை | 24.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |

புதுகை
வரலாறு
நாளிதழ்

24.08.2023 வியாழன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**தி. த. கனகசுந்தரம்பிள்ளை** , ஈழத்து தமிழ் இலக்கிய, பதிப்பாளர், தமிழறிஞர் (பி.1863) (இ.1922)



**பி. ஜி. கெர்** , பம்பாய் மாகாணத்தின் முதல் பிரதம மந்திரி (பி.1888) (இ.1957)



**சிவராம் ராஜகுரு** , இந்திய செயற்பாட்டாளர் (பி.1908) (இ.1931)



**எஸ். அகஸ்தியர்** , ஈழத்து எழுத்தாளர் (பி.1926) (இ.1995)



## இன்றைய நினைவு நாள்

**வேதரத்தினம் பிள்ளை** , இந்திய விடுதலை இயக்க செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி.1897) (இ.1961)



**வே. இராமலிங்கம் பிள்ளை** , நாமக்கல் கவிஞர் (பி.1888) (இ.1972)



**சுந்தரம் கரிவரதன்** , இந்தியாவின் தானுந்து விளையாட்டு வீரர் (பி.1954) (இ.1995)

